### தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்வதைத் தடுக்கவும் –

# இலங்கைக் காவலில் இருக்கும் அனைத்து மீனவர்களையும் - படகுகளையும் உடனடியாக விடுவிக்கச் செய்வீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!



தமிழ்நாட்டில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நேற்று (3.1.2026) சென்னை விமான நிலையத்திலிருந்து புதுடெல்லி திரும்பும் இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பூங்கொத்து கொடுத்து வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, ஜன.4-**

**தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், இலங்கைக் காவலில் இருக்கும் அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்யவும், உரிய தூதரக வழிமுறைகள் மூலம் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு:-**

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் நேற்று (02.01.2026) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்கவும், தொடர்ந்து இதுபோன்ற கைது சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்கவும், இலங்கைக் காவலில்உள்ளஅனைத்துமீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (03.01.2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை மீனவ கிராமத்திலிருந்து 9 மீனவர்கள் இரண்டு மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 02.01.2026 அன்றிரவு இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதாகக் கவலையோடு குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், புத்தாண்டின் தொடக்கத்திலேயே நடைபெற்றுள்ள இச்சம்பவம், தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் அவல நிலையை மீண்டும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் இதுபோன்று தொடர்ந்து கைது செய்வதும், அவர்களது மீன்பிடிப் படகுகளைப் பறிமுதல் செய்வதும் தடையின்றி நடைபெறுவது மிகுந்த கவலைக்குரிய விஷயமாகும் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 73 மீனவர்களும், 251 மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் காவலில் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடர்ச்சியான கைது சம்பவங்கள், தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமுதாய மக்களிடையே பெருத்த இன்னல்களையும், பதட்டத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இது போன்ற கைது நடவடிக்கைகள் இனி மேல் நடைபெறுவதைத் தடுக்கவும், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்திடவும், ஒன்றிய அரசு உரிய தூதரக வழிமுறைகள் மூலம் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (03.01.2026) சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன்,. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### வீரமங்கை வேலு நாச்சியார் – வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள்!

# தமிழ் நிலத்தின் ஆளுமைகளைத் தரணியெங்கும் கொண்டு சேர்த்திடும் நம் பணி தொடர்ந்திடும்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன.4-**

**வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரது பிறந்தநாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் "தமிழ் நிலத்தின் ஆளுமைகளைத் தரணியெங்கும் கொண்ட சேர்த்திடும் நம் பணி தொடர்ந்திடும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

வீரமங்கை வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள்.

மிரட்டினால் அடங்கிவிடுவோம் என எண்ணியோர்க்கு, 'தமிழ்நாடு போராடும்' என அன்றே காட்டிய வீரச்சுடர்கள் தாம் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களும், வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களும்!

இந்திய நாட்டின் விடுதலைக்காக முன்னோடிகளாகப் போராடிய அவர்தம் பெருமையைத் தொடர்ந்து போற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு.

அண்மையில் மதுரையில் திறக்கப்பட்ட மேம்பாலத்துக்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டினோம், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் திருவுருவச் சிலை அமைத்தோம்.

தமிழ்நிலத்தின் ஆளுமைகளைத் தரணியெங்கும் கொண்டு சேர்த்திடும் நம் பணி தொடரும்!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### திராவிடப் பொங்கல் திருநாளையொட்டி

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அளவில் விளையாட்டுப் போட்டிகள்!

## இளைஞர் அணி – மாணவர் அணி – விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு! தா.மோ.அன்பரசன் தகவல்!

*காஞ்சிபுரம், ஜன.4-*

முதல்வர் - தலைவர் தளபதி அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று திராவிடப் பொங்கல் திருநாளையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர- பகுதி - பேரூர் அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இளைஞர் அணி - மாணவர் அணி - விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணிகளின், மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் டி.ஆர்.சாரதிபெரியநாயகம் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வி.விஜயகுமார், டி.கே.கமலக்கண்ணன், ப.ராமமூர்த்தி, தாம்பரம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.சத்தியபிரபு, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கு.கலாநிதி குணாளன், ஏ.விக்கி, எஸ்.ஜெகதீப், டி. ஜெகன், வெ.சங்கீதா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் சி.ரஞ்சித், என்.என். கதிரவன், ம.ரேவதி, கா.வின்கேஷ், கா.செந்தில்குமார், கே.தினேஷ், சுகுணாகுமாரி, க.பிரேம்பாலாஜி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர - பகுதிகளில் திராவிட பொங்கல் திருநாளையொட்டி விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு பின்பு இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் கூறித்து அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியதாவது:-

நம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் - நம்முடைய அன்புத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் முதல் கட்டமாக ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அளவில் 3 விதமான விளையாட்டு போட்டிகளை மிகவும் கோலாகலமாக நடத்தி வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

இதை தொடர்ந்து 2-வது கட்டமாக மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறினார்.

# ஈரோடு - சென்னை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் நேரம் மாற்றம்!

## கே.இ.பிரகாஷ் எம்.பி.க்கு பொதுமக்கள் நன்றி!

*ஈரோடு, ஜன.4-*

ஈரோட்டில் இருந்து சென்னை வரை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இரவு 9 மணிக்கு பதிலாக 9.45 மணியாக நேரத்தை மாற்றி அமைத்திடக்கோரி வியாபாரிகள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கையை ஏற்று ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி ஆலோசனையின் பேரில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் நாடாளுமன்றத்திலும், ஒன்றிய ரயில்வே அமைச்சரிடமும் கோரி க்கை மனு வழங்கினார்.

இதனை ஏற்றுக்கொண்டு தற்போது 9.45 கங்கு மாற்றி அமைக்கப்பட்ட நேரத்தில் ஈரோட் டில் இருந்து சென்னை புறப்பட்ட ரயிலை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

ஈரோடு டூ சென்னை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் நேரம் மாற்றியதற்க்கு வியாபாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷுக்கு நன்றி தெரிவித்தனர்.

நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், மாவட்ட பொருளாளர் ப.க.பழனிச்சாமி, பொன்னுச்சாமி, பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகரன், காயத்ரி இளங்கோவன், மாமன்ற உறுப்பினர் சக்திவேல், கே.டி. சேந்தபுகழன், காங்கிரஸ் மாவட்ட செயலாளர் திருச்செல்வம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோட்டில் இருந்து சென்னை வரை செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இரவு 9 மணிக்கு பதிலாக 9.45 மணி ஆக நேரத்தை மாற்றி அமைத்திடக்கோரி வியாபாரிகள் பொதுமக்கள் என பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கையை ஏற்று ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமியின் ஆலோசனையின் பேரில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கே.இ.பிரகாஷ் நாடாளுமன்றத்திலும், ஒன்றிய ரயில்வே அமைச்சரிடமும் கோரிக்கை மனு வழங்கினார். இதனை ஏற்றுக்கொண்டு தற்போது மாற்றி அமைக்கப்பட்ட நேரத்தில் ஈரோட்டில் இருந்து சென்னை புறப்பட்ட ரயிலை கே.இ.பிரகாஷ் எம்.பி. கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ப.க.பழனிச்சாமி, பொன்னுச்சாமி, பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகரன், லட்சுமண குமார், காயத்ரி இளங்கோவன், மாமன்ற உறுப்பினர் சக்திவேல், கே டி. சேந்தபுகழன், காங்கிரஸ் மாவட்ட செயலாளர் திருச்செல்வம் உள்ளிட்ட மாநில மாவட்ட மாநகர பகுதி பட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

